Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 81/2020**

**Deposition of PW.8 (LW.5)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மூவேந்திரன் | ஜாதி | : | |
| த/பெ | : | பால்ச்சாமி | தொழில் | : | பால் வியாபாரம் |
| கிராமம் | : | கோடாங்கிபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 59/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.05.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் கோடாங்கிபட்டியில் குடியிருந்துகொண்டு பால் வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 7, 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 11.00 மணியைபோல சிமிண்ட் லாரி ஒன்று எங்கள் வீட்டிற்கு முன்பாக பழுதாகி நின்றுகொண்டிருந்ததை சரிசெய்து கொண்டிருந்தார்கள். சத்தம் கேட்டது. வீட்டிற்கு வெளியில் திண்ணையில் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். எங்கள் வீட்டு விளக்கு வெளிச்சத்தில் ரோட்டு ஓரத்தில் தான் லாரியை பழுது பார்த்துக்கொண்டிருந்தார்கள். சத்தம் கேட்டு நான் அங்கு சென்று பார்த்தபோது, இருசக்கர வாகனத்தில் தலைக்கவசம் அணிந்தபடி ஒரு பையன் ஓட்டி வந்து லாரியின் பின்புறத்தில் விட்டு அடிபட்டு வண்டி மீதே கிடந்தார். அவரை தூக்கி பார்த்தபோது அவருக்கு மூச்சு இல்லை. அதன்பின்னிட்டு அவரது உறவினர்களுக்கு போன் செய்து சொன்னோம். ஒரு மணி நேரம் கழித்து வந்தார்கள். ஆம்புலன்ஸ் ஒரு மணி நேரம் கழித்து சம்பவ இடத்திற்கு வந்தது. ஆஜர் எதிரியை நான் பார்த்ததில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

லாரி ஆத்துப்பட்டி பிரிவுக்கு வடக்கு பக்கத்தில் நின்றதா அல்லது தெற்கு பக்கத்தில் நின்றதா என்றால் தெற்கு பக்கம் நின்றது. லாரி எவ்வளவு நேரம் நின்றுகொண்டிருந்தது என்றால் 2 மணி நேரம் நின்றுகொண்டிருந்தது. லாரியின் பின்புறம் ஒளிரும் விளக்குகள் வைக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. ஒளிரும் விளக்குகள் வைக்கப்படவில்லை. வேப்பந்தழையை மட்டுமே சொறுகி வைத்திருந்தார்கள். விபத்து ஏற்பட்ட காலம் கொரோனா காலம் என்றால் சரிதான். சத்தம் கேட்டதற்கு பிறகு தான் நீங்கள் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தீர்கள் என்றால் சரிதான். விபத்தை நீங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். லாரியின் பதிவெண் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. விபத்து நடந்த இடத்தில் நீங்கள் இல்லை என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/–Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor